**கேகாலை மாநகர சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 2,3,5 மற்றும் 9 ஆம் பிரிவுகளில் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2022 செப்தம்பர் 06 ஆம் திகதிய 2296/05 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற அமைச்சரின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2023 மார்ச் 20 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட கேகாலை மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 219 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கேகாலை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ்

கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிட செலவினங்கள் ரூபா 1,606,678 மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | மூலதனச் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 296,750 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | ஆண்டின் வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | நீதிமன்ற தண்டப்பன வருமான கடன்பட்டோர ் ரூபா 326,750 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | வருமான கடன்பட்டோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | முத்திரை கட்டண வருமான கடன்பட்டோர் ரூபா 19,941,754 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்தந்த ஆண்டுக்குரிய முத்திரை கட்டணங்கள் தொடர்பான விவரங்கள் அந்தந்த ஆண்டிலேயே கிடைக்காமல் இருப்பதுடன் தாமதமாக கிடைப்பதால் உரிய ஆண்டிற்கு உள்ளடக்குவதற்கு முடியாமல் இருந்தது. | - மேற்படி - |
| (உ) | மீளாய்வு காலப்பகுதி இறுதியில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் அத்திகதியில் மூலதன ஈடுபாட்டிற்கு வருமான பங்களிப்பு கணக்கின் மீதிக்கு இடையே ரூபா 38,295,000 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது. | எதிர்வரும் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஊ) | புதிதாக கூட்டிணைக்கப்பட்ட மாநகர சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (i) | காணிகளை கூறுகளாக்கி விற்பனை செய்யும் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 2,479,545 ஆன 1 சதவீதமான வரித் தொகை, பூச்சாடிகளைத் திருத்துவதற்காக அறவிடப்பட்ட ரூபா 294,943 ஆன தண்டப்பணத் தொகை வீதி | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | – மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | பழுதுபார்த்தலுக்காக கிடைத்திருந்த ரூபா ஒன்று 1,594,518 தொகை என்பவற்றை வருமானத்திற்கு எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தமையால் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.. | | |
| (ii) | முன்னைய 02 ஆண்டுகளில் நிலையான சொத்துக்களை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 40,386,382 ஆன செலவினம் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | மூலதன செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.5.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| :மீளாய்வு காலப்பகுதி இறுதியில் பொது களஞ்சிய கணக்கில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி அட்டவணைகளுடன் ஒப்பிடும்போது ரூபா 8,101,105 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | கணக்கு அட்டவணை களுடன் ஒப்பிட்டு சீசெய்யப்பட வேண்டும். |

### 1.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i நிதிப் பிரமாணம் 373 | அனைத்து கட்டுநிதிகளையும் திசெம்பர் 31 இல் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் கேகாலை நகர சபையின் 2013 ஜூலை 08 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 25,920 ஆன முற்பணங்கள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. நிதிப் பிரமாணம் 571 | கேகாலை நகர சபையினால் கையளிக்கப்பட்ட மொத்தம் ரூபா 9,871,826 ஆன காலாவதியான 211 | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 2 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை தெளிவுபடுத்தும் வகையில் அதன் செயன் முன்னேற்றத்தை அளவிடக் கூடிய மூன்று செயலாற்றல் குறிகாட்டிகள் இனங் காணப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) உள்ளூராட்சி மன்ற சுற்றறிக்கை | | | |
| i 2018 ஜூலை 19 ஆம் திகதிய 2018/e ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற 01 ஆம் இலக்க சுற்றறிக்கை | இணையத்தின் மூலம் கொடுப்பனவு செய்வதற்கு பிரஜைகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் இருந்தத்துடன் மக்கள் மயப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்காகவும் பொது அலுவலக வாடிக்கையாளர் சேவை நிலையம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | வீதவரி அறவீட்டிற்காக 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2000 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வீத வரி அறவிடப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆதனங்கள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 148,477,448 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வு காலப்பகுதிக்குரிய பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| வருமான மூலம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 8,054,482 | 5,746,037 | 5,590,343 |
| வாடகை | 55,788,296 | 55,343,185 | 5,379,087 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 2,317,557 | 2,723,357 | 164,000 |
| ஏனைய வருமானம் | 134,678,300 | 75,889,116 | 35,727,904 |
| மொத்தம் | **200,838,635** | **139,701,695** | **46,861,334** |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வு காலப்பகுதிக்குரியதாக வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி மீதி ரூபா 5,590,343 ஆக இருந்தது. வீத வரிக்காக பயன்படுத்தப்படுகின்ற மென்பொருளின் பிரகாரம் நிலுவை வீதவரிக்காக அறவிடப்படும் தண்டப்பணம் மற்றும் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் காலங்களில் பொருத்தமான கணனி மென்பொருள் ஒன்று பெற்றுக் கொள்வதாக | நிலுவை வரி தொகை அறவிடப்பட வேண்டியதுடன் தண்டப் பணம் மற்றும் காலப் பகுப்பாய்வு தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | காலப்பகுதி இறுதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை மீதி ரூபா 2,192,473 ஆக இருந்ததுடன் 02 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 391,350 மற்றும் 05 ஆண்டுகளை கடந்த மீதி ரூபா 765,110 ஆக இருந்தது. | நிலுவை அறவிடப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான வருமானங்கள் கால நீதியில் அறவிடப்பட வேண்டும் |
| (ii). | காலப்பகுதியின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய கடை வாடகை தண்டப்பண மீதி ரூபா 2,425,364 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகள் கடந்த மீதி ரூபா 2,055,363 ஆக இருந்தது | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை கடை வாடகை மற்றும் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அறவிடப்பட வேண்டிய வாடி வீட்டு வாடகை மீதி ரூபா 2,945,457 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 2,443,431 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 502,026 ஆக இருந்தது. | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கொடுப்பனவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார பிரதேசத்தின் நிர்மாண வேலைதிட்டத்தின் நிர்வாக செலவினத்திற்காக பிரதான அமைச்சிலிருந்து 2017 ஜனவரி 25 ஆம் தேதி கிடைத்த ரூபா 188,485 தொகையை உரிய செயற்பாட்டுக்கு ஈடுபடுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிழற்பட பிரதி இயந்திரம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக | பொருத்தமான செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கேகாலை மாநகர சபைக்குரிய காணிப் பகுதிகளை குத்தகைக்கு வழங்குவதன் கீழ் பிரான்சிஸ் மொலமுரே மாவத்தையில் அமைந்துள்ள 303 மற்றும் 305 ஆம் இலக்க வீதவரிக்குரிய 24.54 பேர்ச் அளவிலான காணி கேள்வி கோரப்படாமல் வெளித் தரப்பினருக்கு 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக குத்தகைக்கு வழங்கப்பட்டி ருந்ததுடன் 2019 ஆண்டின் பின்னர் குத்தகையாளருடன் உடன்படிக்கைக்கு கைச்சாத் திடப்பட்டிருக்கவில்லை. எனினும் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூபா 74,000 ஆன குத்தகத் தொகையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்த ஆதனத்தில் சபை அங்கீகாரம் இன்றியும் காணப்பட்ட உடன்படிக்கைக்கு முரணாகவும் நிரந்தர கட்டிடம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு இருந்த போதும் மாநகர சபையால் 2024 செப்தம்பர் 30 ஆம் கணக்காய்வு திகதி வரை உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | அங்கீகாரமொன்று இல்லாமல் கட்டிடங்கள் நிர்மாணிப்பதால் உரித்தைக் கையேற்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான ஆதனங்களை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2023 ஆம் ஆண்டின் போது கழிவுப்பொருள் வரி அறவிடப் பட்டிருக்கவில்லை. | ஒரு வருமான பரிசோதகர் மாத்திரம் இருப்பதால் இந்த செயற்பாட்டுக்கு காலத்தை ஒதுக்குவது சிரமமாக உள்ளதாக. | சபைக்கு சொந்தமான வருமானங்களை நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வு காலப்பகுதியில் நகர சபை மண்டபத்தை ஒதுக்குவதற்காக கிடைத்த ரூபா 2,559,150 தொகை களியாட்டத்திற்காக கிடைத்த ரூபா 1,556,250 மற்றும் பூச்சாடிகள் சேதப்படுத்திய தற்காக அறவிடப்பட்ட ரூபா 120,000 ஆன தொகைகளை தீர்வு செய்து வருமானத்துக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலத்தில் சரியாக நடவடிக்கை எடுப்பதாக. | கணக்காண்டிற்கான வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2020 ஒக்தோபர் 02 ஆம் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் ஓட்ட நிலைமையில் காணப்படாத 17 வாகனங்கள் தொடர்பாக கைதவிர்ப்பதற்கு அல்லது திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு 2024 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கைத்தவிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 8.1 பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத காலப்பகுதியில் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட பின்னர் அல்லது எஞ்சின் தொடர்பாக பிரதான திருத்தமொன்றோ ஆகிய விடயங்களுக்கு இடையே முதலில் வரும் சந்தர்ப்பத்திற்கு பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 17 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ் வாகனங்களில் 15 வாகனங்களின் மைலோ மீற்றர் செயற்பாடாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | புதிய மைலோ மீற்றர் சந்தையில் இல்லாமையால் பொருத்த முடியாமல் இருப்பதாக. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒலகம நீச்சல் தடாகத்தின் பார்வையாளர் கூடம் மற்றும் அலுவலக ஓய்வரை II ஆம் கட்ட நிர்மாணத்திற்காக ரூபா 14.98 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு 2019 ஒக்டோபர் 28 ஆம் திகதி வெளித் தரப்பினருடன் உடன் படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனினும் 2024 செப்தம்பர் 9 கணக்காய்வுத் திகதி வரையில் இதற்காக ரூபா 18,571,534 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் அத்தியவசிய வேலை பகுதிகள் பூர்த்தி செய்யப்படா மையால் பயன்படுத்த முடியாமல் காணப்பட்டது. அவ்வாறே நீச்சல் தடாகத்திற்கு பொருத்தப்பட்டிருந்த ரூபா 2,521,000 ஆன பெறுமதியான உதிரிப் பாகங்கள் 2024 செப்டம்பர் 09 கணக்காய்வு திகதி வரையிலும் உத்தரவாத காலம் முடிவடைந்து இருந்தமையால் இயந்திரங்களில் உருவாகும் தவறுகளை உத்தரவாத காலத்தினுள் மேவுகை செய்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்ததுடன் ரூபா 4,908,250 பெறுமதியான 02 உதிரி பாகங்களுக்காக வழங்கப்பட்டிருந்த உத்தரவாத காலத்தில் கணக்காய்வு திகதி வரை 01 வருடமும் 6 மாதங்களும் முடிவடைந்து இருந்தது. கணக்காய்வு சந்தர்ப்பம் வரையில் அவ்விடத்தில் புற்கள் வளர்ந்திருந்ததுடன் நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் விளைவற்ற செலவினம் ஒன்றாக மாறி இருந்தது. | நிர்மாணத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்காக வழங்க தீர்மானிக்கப் பட்டுள்ளதாக. | பொது ஆதனங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4 கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த காலப் பகுதிக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், நிதிக் கூற்றுகளுக்குரிய குறிப்புகள் கணக்காய்விற்காக 2024 செப்தம்பர் 30 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2023 மார்ச் 20 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மாநகர சபைக்கு உரிய கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2024 மே 28 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் உரிய கணக்குகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | கணக்குகளை சமர்ப்பித்தல் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |